இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 26.10.2026

சிறுமிகள் கடத்தல்!

தி.மு.க. ஆட்சியில் போதைப் பொருள் கடத்தலுக்கு அடுத்ததாக சிறுமிகள் கடத்தல் அதிகமாகி வருகிறது.

தமிழ்நாட்டில் குழந்தைகள், சிறுமிகள் மாயமாகும் சம்பவங்கள் அதிகரித்து வருகிறது. தி.மு.க. ஆட்சியில் பெண் குழந்தைகளுக்கு பாதுகாப்பற்ற சூழல் நிலவுவதால் பொதுமக்கள் பீதியில் உள்ளனர். சட்டம் ஒழுங்கு இருக்கிறதா? போலீஸ் இருக்கிறதா? முதலமைச்சர் என்ற ஒருவர் இருக்கிறாரா? அவருக்கு ஆட்சியின் மீதும் மக்கள் மீதும் அக்கறை என்ற ஒன்று இருக்கிறதா என்ற கேள்வியைத்தான் திரும்பத் திரும்ப கேட்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

பெண்கள், குழந்தைகள் பாதுகாப்புக்காக விஜய் உருவாக்கிய சிங்கப் பெண் படை என்ன செய்து கொண்டு இருக்கிறது? அப்படி ஒரு படை செயல்படுகிறதா? அந்தப்படைஇதுவரைஎன்னசாதனைகள்செய்துள்ளதுஎன்றுமுதலமைச்சரால் சொல்ல முடியுமா? அடிக்கடி காவல் துறை விழாக்களில் மட்டும் பங்கெடுத்து சல்யூட் வாங்கிக் கொள்ளும் விஜய் இதுவரை சல்யூட் அடிக்கும் வகையில் செய்திருக்கும் சாதனைகள் என்ன? குற்றத்தடுப்புகள் என்ன?

★ இராணிப்பேட்டையில் சேகர் - பிரேமா ஆகியோரின் ஒரு வயது பெண் குழந்தை கடந்த செப்டம்பர் 23-ஆம் தேதி, பெற்றோருடன் தூங்கிக் கொண்டிருந்த நிலையில், திடீரென மாயமானது. குழந்தை காணாமல் போய், ஒரு மாதமாகியும் இதுவரை எந்த தகவலும் கிடைக்காமல் காவல்துறை திணறி வருகிறது.

★ செஞ்சியை அடுத்த நடுப்பட்டு கிராமத்தில் பிறந்தநாள் கொண்டாடிவிட்டு பெற்றோருடன் வீட்டில் தூங்கிய 7 வயது சிறுமி கடந்த 12ம் தேதி மாயமானார். சிறுமி காணாமல் போய் 13 நாட்களாகியும் இதுவரை கண்டுபிடிக்கப்பட வில்லை. சி.பி.சி.ஐ.டி. விசாரணைக்கு உத்தரவிட்டும் சிறுமி குறித்து எந்த தகவலும் கிடைக்காமல் காவல்துறை திணறுகிறது.

★ பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை தாலுக்காவில் உள்ள வெங்கலம் அரசு மேல்நிலைப் பள்ளியில் 10 -ஆம் வகுப்பு படித்து வந்த இரண்டு மாணவிகளை கடந்த 21ஆம் தேதி முதல் காணவில்லை. காணாமல் போன சிறுமிகள் குறித்து இதுவரை எந்தத் தகவலும் இல்லை.

★ கிருஷ்ணகிரி மாவட்டம் சிங்காரப்பேட்டை பகுதியைச் சேர்ந்த பேக்கரி கடை உரிமையாளர் திருநாவுக்கரசுவின் 12வயது மகன் சஞ்சய், தனியார் பள்ளியில் ஏழாம் வகுப்பு படித்து வருகிறார். இரண்டு நாட்களுக்கு முன் பள்ளி முடிந்து வீடு திரும்பிய சஞ்சய், தனிப்பயிற்சிக்காக ஆசிரியர் ஒருவர் வீட்டுக்குச் சென்றுள்ளார். இரவாகியும் அவர் வீடு திரும்பாத நிலையில், அதிர்ச்சியடைந்த பெற்றோர் சிங்காரப்பேட்டை காவல்நிலையத்தில் புகார் அளித்தனர். இதுகுறித்து வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்ட போலீசார், அப்பகுதியில் உள்ள சி.சி.டி.வி. பதிவுகளை ஆய்வு செய்தனர். அப்போது, சிறுவன் சஞ்சய், இருசக்கர வாகன ஓட்டிகளிடம் லிப்ட் கேட்பதும், பின்னர், ஒரு வாகனத்தில் ஏறி சென்றதும் தெரியவந்தது. இதையடுத்து, சிறுவனை யாரேனும் கடத்திச் சென்றார்களா என்ற கோணத்தில் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

★ விழுப்புரம் மாவட்டம் அய்யூர் அகரம் பகுதியில் 6 வயது சிறுமியை ஒருவர் தூக்கிச் சென்றதை பொதுமக்கள் பார்த்துவிட்டார்கள். உடனே விரட்டிப் பிடித்திருக்கிறார்கள். இல்லாவிட்டால் அந்தக் குழந்தையும் காணாமல் போயிருக்கும்.

- இதுதான் விஜய் ஆட்சியில் பாதுகாப்பு நிலைமை ஆகும்.

ஆட்சியாளர்கள் மீதும், போலீஸ் மீதும் பயமில்லாத காலத்தில் தான் இதுபோன்ற குற்றச்சம்பவங்கள் அதிகரிக்கும். அதைத் தான் இப்போது பார்க்கிறோம்.

தனக்கு வாக்களித்த நண்பா, நண்பீஸைக் காப்பாற்றவில்லை விஜய். குட்டீஸைக் காப்பாற்றவில்லை விஜய். 'ஒவ்வொரு வீட்டிலும் இருக்கும் குட்டி விஜய்யும், குட்டி விஜியும் தங்கள் பெற்றோரை, தாத்தா பாட்டியை எனக்கு வோட்டுப் போட வைக்க வேண்டும்' என்று குழந்தைகளை, சிறுவர் சிறுமிகளைத் தூண்டி வோட்டு வாங்கிய விஜய் ஆட்சியில் சிறுமிகளுக்கு பாதுகாப்பு இல்லை. சிறுவர்களுக்கு பாதுகாப்பு இல்லை. காணாமல் போகிறார்கள். கடத்தப்படுகிறார்கள். மாயமாகிறார்கள். கையை பிசைந்து கொண்டு நிற்கிறது போலீஸ். அதைப் பற்றிய எந்தக் கவலையும் இல்லாமல் பட்டு வேட்டி சட்டையில் சுற்றிக் கொண்டு இருக்கிறார் விஜய்.

'நான் பதவியேற்ற அடுத்த நொடி முதல் எந்தக் குற்றச் சம்பவமும் நடக்காது' என்று சவால் விட்ட விஜய் இப்போது என்ன செய்து கொண்டு இருக்கிறார்?

"பச்சை புள்ளைங்க.. படிக்கிற புள்ளைங்க... சின்னப் பொண்ணுங்க... வீட்டுல இருக்கிற பொண்ணுங்க... வேலைக்கு போகிற பொண்ணுங்க... இதுங்க எல்லாருக்கும் நடக்கிற கொடுமைகளை சொல்ல முடியாது சார்" என்று டயலாக் பேசிய விஜய் ஆட்சியில் இப்போது என்ன நடக்கிறது?

விஜய் முன்பு கேட்ட கேள்விதான் இப்போதும் நினைவுக்கு வருகிறது...

"நீங்க எதுக்குங்க சார்?

உங்க ஆட்சி எதுக்குங்க சார்?


உங்களுக்கு சி.எம்.பதவி எதுக்குங்க சார்?"

●●

தி.மு.க. கட்டமைத்த தமிழ்நாடு; த.வெ.க. ஆட்சியில் கொடுங்காடு!

கொலைக்களமாகவும் குற்றவாளிகளின் வேட்டைக்காடாகவும் தமிழ்நாடு மாறி வருகிறது!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம்!



சென்னை, அக்.26-

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (25.10.2026) விடுத்த வலைதளப் பதிவில், "தி.மு.க. கட்டமைத்த தமிழ்நாடு, இன்று த.வெ.க. ஆட்சியில் கொடுங்காடாகி விட்டது" என்றும் "கொலைக்களமாகவும் குற்றவாளிகளின் வேட்டைக் காடாகவும் தமிழ்நாடு மாறி வருகிறது!" என்றும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

நமது மாநிலத்திற்கு 'தமிழ்நாடு' எனப் பெயர் சூட்டி, அதன் உள்கட்டமைப்பையும் வளர்ச்சியையும் மேம்படுத்தியது தி.மு.க. ஆட்சி. விஜய் தலைமையிலான த.வெ.க ஆட்சியில் நமது தமிழ்நாடு, மனிதர்கள் வாழத் தகுதியில்லாத மாநிலமாக மாறி வருகிறது.

கடந்த இரண்டு மாதங்களில் தமிழ்நாட்டில் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் கொலைகள், கொள்ளைகள், போதைப் பொருள் விவகாரங்கள், பெண்கள் மீதான பாலியல் குற்றங்கள், சிறுமிகளுக்கும்கூட பாதுகாப்பில்லாத நிலை, மோசமாகச் சீரழிந்துள்ள சட்டம்-ஒழுங்கு நிலவரம் ஆகிய வற்றைப் பட்டியலிட்டு கழகத் தலைவர் அவர்கள் தனது சமூக வலைத்தளப்பக்கத்தில் பதிவிட்டுள்ள செய்தியில், "இது நாடா? இல்லை காடா? என்று தேர்தலுக்கு முன் விஜய் பேசியது இதைத்தானா?" எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

கழகத்தலைவரின் வலைதளப் பதிவு வருமாறு:-

த.வெ.க. ஆட்சியில் Wild Wild Tamil Nadu..!

கடந்த இரு மாதங்களாகத் தமிழ்நாட்டில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு நடை பெற்று வரும் கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமை மற்றும் சிறுவர்கள் மாயமாகும் சம்பவங்களால் பொதுமக்கள் பீதியில் உறைந்து போயுள்ளனர். இதை முன்பே கணித்துத்தான், "இது என்ன நாடா இல்லை காடா?" என நாஸ்ட்ரடாமஸ் போல தேர்தலுக்கு முன்பு விஜய் அவர்கள் பேசினாரா?

'துப்பாக்கி ஹீரோ' எனத் திரையில் பார்த்ததை நம்பி வாக்களித்த மக்களே, குற்றங்களைத் தடுக்கத் 'துப்பில்லாத ஹீரோ' எனப் பேசத் தொடங்கிவிட்டனர். கோட் சூட் - பட்டு வேட்டி சட்டை அணிவதும், கான்வாயில் வந்து செல்வதும் மட்டும்தான் முதலமைச்சரின் பணி என்ற மூடநம்பிக்கையில் இருந்து எப்போது விடுபடுவார் திரு. விஜய்?

முதமைச்சருக்கான அலுவலகத்தையும், இல்லத்தையும் தயார் செய்வது தொடர்பான



வேலைகளைத் தவிர, ஆறு மாத த.வெ.க. ஆட்சியில் உருப்படியாக வேறு ஒன்றுமே நடந்ததாகத் தெரியவில்லை.

தனது சொகுசைப் பற்றி இருக்கும் அக்கறையில் சிறிதேனும் பொதுமக்கள், குழந்தைகளின் பாதுகாப்பில் முதலமைச்சருக்கு இருக்க வேண்டும்.

கொலைக்களமாகவும் குற்றவாளிகளின் வேட்டைக்காடாகவும் தமிழ்நாடு மாறி வருவது தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

இவ்வாறு கழகத் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

சேலத்தின் வரலாற்றைப் பேசும் 'சேலத்தின் எழில் முகம்!'

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினிடம் நூலை வழங்கி வாழ்த்துப் பெற்றார் ஈசன் எழில் விழியன்!



சேலம், அக். 26-

சேலத்தின் மலரும் நினைவுகள், வரலாற்றுச் சிறப்புகள், அரசியல் பெருமைகள் என மண்ணின் அடையாளங்களைப் பதிவு செய்யும் வகையில், தி.மு.க. பிரமுகர் ஈசன் எழில் விழியன் எழுதியுள்ள 'சேலத்தின் எழில் முகம்' நூலை, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் வழங்கி வாழ்த்துப் பெற்றார்.

சேலம் தி.மு.க.வின் மூத்த முன்னோடிகளில் ஒருவராக விளங்கிய மறைந்த ஈசன் கே.துரைசாமி அவர்களின் மகனும், சேலம் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் ஈசன் இளங்கோவின் தம்பியுமான ஈசன் எழில் விழியன், சேலத்தின் வரலாற்றுப் பெருமைகளையும், காலப்போக்கில் நினைவுகளாகப் பதிந்த நிகழ்வுகளையும், அரசியல் பயணத்தின் முக்கிய அம்சங்களையும் தொகுத்து இந்த நூலை எழுதியுள்ளார்.

ஒரு நகரத்தின் பெருமை அதன் நிகழ் கால வளர்ச்சியில் மட்டுமல்ல; அதன் வரலாற்றிலும், அதை உருவாக்கிய மனிதர்களின் பங்களிப்பிலும், தலைமுறை தலைமுறையாகக் கடத்தப்படும் நினைவுகளிலும் அடங்கியிருக்கிறது. அந்த வகையில், சேலத்தின் அடையாளங்களையும் வரலாற்றுச் சுவடுகளையும் ஆவணப்படுத்தும் முயற்சியாக 'சேலத்தின் எழில் முகம்' நூல் அமைந்துள்ளது.

சேலத்தின் கடந்த காலச் சிறப்புகளை எதிர்காலத் தலைமுறையினருக்கு அறிமுகப்படுத்தும் நோக்கில் எழுதப்பட்ட இந்நூலை, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் ஈசன் எழில் விழியன் வழங்கி வாழ்த்துப் பெற்ற நிகழ்வு குறிப்பிடத்தக்கதாக அமைந்தது.

கனமழை எதிரொலி :

நீலகிரி மாவட்டத்தில் சுற்றுலாத் தலங்கள் அனைத்தும் மூடல்!

'நீலகிரிக்கு வரவேண்டாம்!' – சுற்றுலாப் பயணிகளுக்கு மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தல்!

ஊட்டி, அக். 26-

நீலகிரி மாவட்டத்தில் கடந்த மூன்று நாட்களாக லேசானது முதல் மிதமானது வரை மழை பெய்து வந்த சூழலில் நேற்று இரவு அதிகன மழையாக மாறி உள்ளது..மாவட்டத்தில் மிக அதிக அளவாக கோத்தகிரி குன்னூர் பகுதியில் நேற்று இரவு கனமழை பெய்தது இதன் காரணமாக குன்னூர் உட்பட்ட பர்லியார்ில் நேற்று இரவு 21 சென்டிமீட்டர் அளவுக்கு மழை பெய்த காரணத்தினால் உதகை குன்னூர் மேட்டுப்பாளையம் தேசிய நெடுஞ்சாலையில் முழுவதுமாக பாதிக்கப் பட்டு ஆங்காங்கே மண் சரிவுகளும் மரங்கள் விழுந்தும் காணப்படுகின்றது இதன் காரணமாக உதகை குன்னூர் மேட்டுப்பாளையம் தேசிய நெடுஞ்சாலை மூடப் பட்டுள்ளது.

மேலும் கோத்தகிரியில் பெய்த மழையின் காரண மாக உதகை கோத்தகிரி சாலையும் இன்று 11 மணி முதல் மூடப்பட்டது தொடர்ந்து நீலகிரிக்கு மழைக்கான சிகப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள தால் சமவெளி பகுதியில் இருந்து உதகை மற்றும் குன்னூர் வரவேண்டிய அத்தியாவசியப் பொருட்களினுடைய சேவை முழுவதுமாக நிறுத்தப் பட்டுள்ளது இதனால் உதகையை குன்னூரில் இருந்து சமவெளி பகுதிக்கு செல்ல வேண்டிய மக்கள் பெரும் அவதிக்கு உள்ளாகி உள்ளனர். இந்த நிலையில் நேற்று இரவு பரலியார் பகுதியில் ஏற்பட்ட அரசுப் பேருந்து மீது மரம் விழுந்ததில் பேருந்து இயக்கி சென்ற கேத்தி பாலடாவைச் சேர்ந்த அரசு ஓட்டுநர் ஜனகராஜ் என்பவர் விபத்தில் சிக்கி உயிரிழந்தார் நேற்று காலை முதல் நடைபெற்றுக் கொண்டிருக்கிற மீட்பு பணிகளை. குன்னூர் சட்டமன்ற உறுப்பினரும் மாவட்ட கழக பொறுப்பாளருமான கே எம் ராஜு மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் லட்சுமி பவ்யா ஆகியோர் நேரில் சென்று மீட்பு பணிகளை துரிதப் படுத்தினார்கள்.

இதற்கிடையே மாவட்ட ஆட்சித் தலைவர் லட்சுமி பவ்யா விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு :

நீலகிரி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள இயற்கை பேரிடர் காரணமாக நீலகிரிக்கு சமவெளி பகுதியில் இருந்து வர வேண்டிய அத்தியாவசிய பொருட்கள் தங்கு தடை இன்றி கிடைக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்படுவதுடன் நீலகிரிக்கு சுற்றுலாப் பயணிகள் மூன்று நாட்களுக்கு வர வேண்டாம் என்றும் இந்த சூழ்நிலையை கருத்தில் கொண்டு மாலை 6 மணி முதல் காலை 7 மணி வரை போக்குவரத்துகள் தடை செய்யப்படும் இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

இதற்கிடையே மழையால் சேதம் அடைந்த பகுதிகளை பார்வையிட்ட குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் கே.எம்.ராஜு மழையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உடனடியாக நிவாரணங்கள் வழங்க வேண்டும் என்றும் நிவாரண பணிகளில் கழகத் தோழர்கள் உடனடியாக ஈடுபட்டு மழையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவிகளை செய்யும் படியும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதைத்தொடர்ந்து நீலகிரி மாவட்டத்தில் இருந்து இயக்கப்பட வேண்டிய சமவெளிக்கு பகுதிகளுக்குச் செல்ல வேண்டிய அனைத்து, பேருந்துகளும் நிறுத்தப்பட்டுள்ளன. இரவு அல்லது இன்று காலை சீரமைப்பு பணிகள் முழுமை பெற்றால் மட்டுமே சமவெளிப் பகுதிகளுக்கு பேருந்துகள் இயக்கப்படும் என போக்கு வரத்துக் கழகம் அறிவித்துள்ள சூழலில் இயல்பு வாழ்க்கை முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.



குன்னூர் பர்லியாறு சாலையில் ஏற்பட்டுள்ள மண் சரிவுகள் மற்றும் பாதிப்புகளை குன்னூர் சட்டமன்ற உறுப்பினரும், நீலகிரி மாவட்ட பொறுப்பாளருமான கே.எம்.ராஜ் நேரில் சென்று பார்வையிட்டு, பொதுமக்கள் வழக்கம்போல் இந்த சாலையை பயன்படுத்திட தேவையான நடவடிக்கைகளை போர்கால அடிப்படையில் மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் மற்றும் அதிகாரிகளை கேட்டுக்கொண்டார்.உடன் மாவட்ட அவை தலைவர் போஜன், குன்னூர் ஒன்றியச் செயலாளர் பிரேம்குமார் மற்றும் பலர் உள்ளனர்.